දුරකථන
தொலைபேசி
Telephones
011-2136600
011-2136650

ලේකම්
செயலாளர்
Secretary
011-2136602

ෆැක්ස්
தொலைநகல்
Fax
011-2876169
011-2876181

විද්‍යුත් තැපෑල
மின் - அஞ்சல்
E - mail
info@psc.gov.lk

වෙබ් අඩවිය
இணையத்தளம்
Website
www.psc.gov.lk

මගේ අංකය
எனது இல.
My No.
PSC/APP/HB/01/2022

ඔබේ අංකය
உமது இல.
Your No.

දිනය
திகதி
Date

2023 செத்தெம்பர் மாதம் ஆம் திகதி

රාජ්‍ය සේවා කොමිෂන් සභා කාර්යාලය
அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்
**OFFICE OF THE PUBLIC SERVICE COMMISSION**

අංක 1200/9, රජමල්වත්ත පාර, බත්තරමුල්ල
இல. 1200/9, இரஜமல்வத்தை வீதி, பத்தரமுல்லை
**No. 1200/9, Rajamalwatta Road, Battaramulla**

அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை இலக்கம் : 02/2023

அனைத்து அமைச்சுக்களினதும் செயலாளர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்கள்,

**சேவைகளின்/பதவிகளின் மேலுள்ள தரங்களின் வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சைகளுக்குத் தோற்றுவதன் பொருட்டு உத்தியோகத்தர்கள் தகைமைகளைப் பூர்த்தி செய்தல்**

உத்தியோகத்தர்கள் தமது சேவைகளின்/பதவிகளின் மேலுள்ள தரத்திற்குப் பதவியுயர்வினைப் பெற்றுக் கொள்வதற்கு முன்னர், மேலுள்ள தரங்களுக்குரிய வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சைகளுக்குத் தோற்றுவதற்கு ஏற்புடைய அதிகாரிகளினால் அவர்களுக்கு அனுமதி வழங்கப்படும் சந்தர்ப்பங்கள் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அவதானிக்கப்பட்டுள்ளன.

02. சேவைகளின்/பதவிகளின் தரங்களுக்கு ஏற்புடைய வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சைகளை நடாத்துவதன் நோக்கமாக அமைவது, வெறுமனே ஏற்புடைய விடயங்கள் தொடர்பான கோட்பாட்டு அறிவு மாத்திரமன்றி ஏற்புடைய சேவைகளில/பதவிகளில் ஈடுபடுவதன் மூலம் பெற்றுக் கொள்ளும் அனுபவத்தின் ஊடாகக் கட்டியெழுப்பப்படும் தேர்ச்சியை மதிப்பிடும் அதே வேளை ஏற்புடைய தரத்தின் கடமைகளை நிறைவேற்றுகையில் தேவைப்படும் அறிவு, திறனை விருத்தி செய்து கொள்வதற்கான வாய்ப்புக்களை வழங்குதலாகும். எனவே, உத்தியோகத்தர்கள் அவர்களது குறித்த சேவைக்கு/தரத்திற்குப் பதவியுயர்வைப் பெற்றுக் கொண்டதன் பின்னரே அவர்கள் ஏற்புடைய சேவையின்/பதவியின் தரத்திற்குரிய வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகைமை பெற்றுள்ளனர் எனக் கருதுதல் வேண்டுமென ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

03. எனவே, எதிர்வரும் காலங்களில் குறித்த ஒரு உத்தியோகத்தர் தனது சேவையில்/பதவியில் தற்போது தானிருக்கும் தரத்திற்கு ஏற்புடைய வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சைக்கு மாத்திரமே தோற்ற வேண்டும் என்பதோடு, மேலுள்ள தரமொன்றின் வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அதிகாரிகளினால் அனுமதி வழங்கப்படலாகாது எனவும் ஆணைக்குழுவினால் மேலும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

04. இந்த சுற்றறிக்கை நடைமுறைப்படுத்தப்படும் திகதிக்கு முன்னர் கீழுள்ள தரமொன்றின் பதவியில் ஈடுபட்டுள்ள அதே வேளை அதன் மேலுள்ள தரத்திற்கான வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சையின் ஒரு பகுதியை மாத்திரம் பூர்த்தி செய்துள்ள எவரேனும் ஒரு உத்தியோகத்தர் இருப்பின், அவ் உத்தியோகத்தருக்கு ஏற்புடைய மேலுள்ள தரத்திற்குப் பதவியுயர்வு வழங்கியதன் பின்னர் குறித்த வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சையின் எஞ்சிய பகுதிக்குத் தோற்றுவதற்கு அவருக்கு சந்தர்ப்பம் வழங்குவதற்கு உரிய அதிகாரியினால் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் எனவும் அரசாங்க சேவை ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

05. இந்த சுற்றறிக்கை நடைமுறைப்படுத்தப்படும் திகதிக்கு முன்னர் மேலுள்ள தரத்தின் வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைந்துள்ள உத்தியோகத்தர்களை ஏற்புடைய வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சையைப் பூர்த்தி செய்த உத்தியோகத்தர்களாகக் கருதி நடவடிக்கை எடுக்க முடியும்.

06. மேலும், உத்தியோகத்தர்கள் சேவை அனுபவம் மூலம் பெற்றுக் கொள்ளும் அறிவு, திறன்கள் மற்றும் மனப்பான்மைகளைப் பயன்படுத்தி மேலுள்ள தரமொன்றில் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் திறனை மதிப்பிடுவதன் பொருட்டு அத்தகைய வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சைகளின் உள்ளடக்கத்தைத் தொடர்ச்சியாக மீளாய்விற்கு உட்படுத்துவதை உறுதிப்படுத்தும் தேவைப்பாடு குறித்து அனைத்து நியமிப்புச் செய்யும் அதிகாரிகளினதும், நிருவாக அதிகாரிகளினதும், திணைக்களத் தலைவர்களினதும் கவனத்தை ஈர்ப்பதற்கு ஆணைக்குழு தீர்மானித்துள்ளது. (இதன் பொருட்டு திறந்த புத்தகத் தேர்வு/பரீட்சைகள்/விடய ஆய்வு போன்ற மதிப்பீட்டு முறைகளைத் தேவையான சந்தர்ப்பங்களில் பின்பற்றுவதற்கான இயலுமை குறித்து ஆராய்தல் வேண்டும்.)

07. இந்த சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படும் திகதிக்கு முன்னர் வினைத்திறன் காண் தடைதாண்டல் தொடர்பில் எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்குப் பாதிப்பின்றி 2024.01.01 ஆம் திகதி முதல் இந்த சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்பிற்கமைய,

டப்ளியூ.எச்.எம்.எம்.சீ.கே.தயாரத்ன
செயலாளர்
அரசாங்க சேவை ஆணைக்குழு